**மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில்**
**வருவாய்த் துறையின் செயல்பாடுகள் குறித்து**
**வருவாய் கோட்ட அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம்**

'அரசின் நலத்திட்டங்களை செயல்படுத்துவதிலும் கட்டுக் கோப்பான சமுதாய முன்னேற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலும், இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது, மக்களை நாடிச் சென்று உதவிக் கரம் நீட்டுவதிலும், பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் மக்களுடன் இணைந்து செயல்படுவதிலும் வருவாய்த்துறை முக்கியப் பங்காற்றுவதுடன், நிருவாகத்தின் முதுகெலும்பாக தொடர்ந்து விளங்கி வருகிறது.' மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் வருவாய்த்துறைபற்றி பெருமையோடு குறிப்பிட்டுள்ளார்கள்.

பல்வேறு பெருமைகளையும் பாரம்பரியத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள வருவாய்த் துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் அவற்றின் செயல்பாடுகள் குறித்து 15 மாவட்டங்களைச் சார்ந்த வருவாய் கோட்டாட்சியர்கள் பங்கேற்ற ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் 'தோப்பு' என்.டி.வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் எழிலகம் வருவாய் கருத்தரங்கக் கூடத்தில் இன்று (31.01.2013) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறை, நிலநிருவாகம், நிலசீர்திருத்தம், நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டம் ஆகிய துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்கள் அவற்றின் செயல்பாடுகள் மற்றும் பல்வேறு பணிகள் குறித்தும் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்கள்.

தலைமையுரையாற்றிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 'மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் தொலை நோக்குப் பார்வையுடன், வருவாய்த்துறையின் சார்பில், 9 புதிய வருவாய் வட்டங்கள், 107 வருவாய் கிராமங்களை உருவாக்கியும், 2 வருவாய் கோட்டங்கள் மற்றும் 8 வருவாய் வட்டங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள், தவிர கடந்த 19.12.2012 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவாய்த்துறைக்கு 7 கூடுதல் கட்டடங்கள் கட்ட அறிவிப்பு செய்துள்ளார்கள். மேலும் திருப்பூர், கடலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்கான ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**5,354 புதிய கிராம நிருவாக அலுவலர்கள் நியமனம்,** அவர்களின் பணி சிறக்க, நாட்டிலேயே முதன் முறையாக மடிக்கணினிகள் மற்றும் அவர்களுக்கு 118 மையங்களில் பயிற்சிகள், வருவாய்த்துறை அலுவகங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில் புதிய பணியிடங்கள் மற்றும் தளவாடங்கள், மாவட்டங்களுக்கு வருகை தரும் முக்கிய பிரமுகர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 192 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், ஏழை எளியோர் மட்டுமின்றி அனைத்துத் தரப்பினரும் பயன் பெறும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு, மாநிலம் முழுதும் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ள '**புதிய விரைவு பட்டா மாறுதல் திட்டம்**', இத்திட்டத்தின் கீழ், நாளது வரையில், **25,30,322 மனுக்களின் மீது இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது** வருவாய்த்துறை வரலாற்றில் இதுவரையில் நிகழ்த்தப்படாத சாதனை. நாளதுவரையில், 1,07,144 பயனாளி களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

பெண்களை பெரிதும் கவர்ந்துள்ள **விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கிடும் திட்டம்.** இத்திட்டத்தின் கீழ், நாளதுவரையில், **28 இலட்சத்து 4ஆயிரத்து 308 குடும்பங்களுக்கு** வழங்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் பயிலும் 6, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களில் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தேவையான அனைத்து சான்றிதழ்களையும் தாம் பயிலும் பள்ளியிலே பெற்றிடும் வகையில் நாளது வரையில், **15,47,538 இலட்சம் மாணவ மாணவியர் களுக்குத் தேவையான அனைத்து வகையான சான்றிதழ்களும்** வழங்கப்பட்டுள்ளன.

**சமூக பாதுகாப்புத் திட்டத்தின்** கீழ், தமிழகத்தில் தற்பொழுது **29.67 இலட்சம் பயனாளிகளுக்கு மாதம் ரூ.1000/– ஓய்வூதியம்** வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியப் பலன்கள் விரைவாக சென்றடைந்திட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள '**பயோ மெட்ரிக் கார்டு**' மூலம் 2000 க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் வசிக்கும் ஓய்வூதியதாரர்களுக்கு '**பயோ மெட்ரிக் கார்டு' திட்டத்தின்** கீழ், ஓய்வூதியம் வழங்கிடும் மகத்தான திட்டம். இத்திட்டத்தின் கீழ், நாளது வரையில், **4,033 கிராங்களில் வசிக்கும் 6 இலட்சத்து 8 ஆயிரத்து 428 நபர்களுக்கு வங்கிகள் மூலம் துரிதமாக ஓய்வூதியமானது** வழங்கப்பட்டு வருகிறது.

மாநிலம் முழுவதுமுள்ள ஏழை எளிய விவசாயப் பெருமக்களுக்கு பெரிதும் பயன் தரும் வகையில் '**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்**' மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் நடைபெற்ற கணக்கெடுப்பின்படி,

ஏறத்தாழ **3 கோடி பயனாளிகள்** தகுதி வாய்ந்த உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டு உள்ளார்கள். அவர்களில் **72.40 இலட்சம்** குடும்பதாரர்களுக்கு அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தின் கீழ், நாளது வரையில் உறுப்பினர் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு கல்வி உதவி, உறுப்பினர் மற்றும் அவரது பிள்ளைகளுக்கான திருமண உதவி, இயற்கையான மரணம் மற்றும் ஈமச்சடங்கு செலவு, விபத்து காயம், மரணம் மற்றும் ஈமச்சடங்கு செலவு, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஆதரவற்ற வேளாண் தொழிலாளர் ஓய்வூதியம் போன்ற வகைகளில், நாளதுவரையில் ஏறத்தாழ **10 இலட்சத்து 92 ஆயிரத்து 976 பயனாளிகளுக்கு 1,294 கோடியே 21 இலட்சம் ரூபாய்** நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளதும் மகத்தான சாதனை என்று குறிப்பிட்டார்கள்.

நமது வருவாய்த் துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களும் அது உரிய மக்களை; உரிய நேரத்தில் சென்றடைந்திட வேண்டும் என்று உத்தரவிட்டு உள்ளதோடு மட்டுமின்றி, திட்டங்களை நடைமுறைபடுத்திடும் போது ஏற்படும் இடர்பாடுகளைக் கேட்டறிந்து, அவைகளை உடனடியாக களைந்திட உரிய நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் இயற்கை பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற் கொள்வதோடு, பாதிக்கப்பட்டோருக்கான உடனடி நிவாரண உதவிகளை விரைந்து அளித்திட வேண்டும். இதனைக் நாம் அனைவரும் கருத்தில் கொண்டு பணியாற்றி, இந்த வருவாய்த்துறைக்கு பெருமையைச் சேர்த்திட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறையின் முதன்மைச் செயலர் திரு. ராஜீவ் ரஞ்சன் இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் டி.எஸ்.ஸ்ரீதர் இ.ஆ.ப., நிலஅளவை/நிலவரித்திட்டமுதன்மைச் செயலர் / ஆணையர் முனைவர் ஆர்.கண்ணன்,இ.ஆ.ப., நிலநிருவாக ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர் திரு. யத்தீந்திர நாத் ஸ்வேன் இ.ஆ.ப., நில சீர்திருத்தத்துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன் இ.ஆப., கூடுதல் ஆணையர் (பேரிடர் மேலாண்மை) திரு.ஆஷிஷ் சாட்டர்ஜி இ.ஆப., நிலசீர்திருத்த இயக்குநர் திரு. ஜெ. சந்திரகுமார் இ.ஆ.ப., நகர்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்புற நிலவரித்துறை ஆணையர் திரு. எஸ். முருகய்யா இ.ஆ.ப., வருவாய் நிருவாக இணை ஆணையர் முனைவர் ஜெ.ஜெயராமன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூடுதல் தலைமைச்செயலர் / வருவாய் நிருவாக ஆணையருக்காக
வருவாய் நிருவாகம், எழிலகம், சேப்பாக்கம், சென்னை 5.

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9